# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.187/2019 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 10 ( PW– 10 ) |
| **பெயர்** | :– | மணி |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | பெருமாள் |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

01–ஆம், 04–ஆம், 05–ஆம், 07–ஆம், 08–ஆம் எதிரிகள் தோன்றினார்கள். 03–ஆம், 05–ஆம் எதிரிகள் தோன்றவில்லை. மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:–**

நான் சேலம், மேட்டூர், சாம்பள்ளியில் வசிக்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது. சான்றாளர் சதீஸ்குமார் என் மகன். இந்த வழக்கில் இறந்துபோன அமிர்தராஜை எனக்குத் தெரியாது. இந்த வழக்குச் சம்மந்தமான விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

என் மகனுக்கு மேட்டூரில் மின்நகரில் ஒரு மெத்தை வீடு இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டை ஸ்டாலின் ஜெயக்குமார் பெயரில் என் மகன் கிரயம் கொடுத்தார் என்றால் எனக்குத் தெரியாது. அந்த வீட்டின்மீது என் மகன் சேலம் சுந்தரம் நிதி நிறுவனத்தில் 14 இலட்சம் உரூபாய் அடைமான கடன் வாங்கியிருந்தார் என்றால் எனக்குத் தெரியாது. என் மகன் அந்த கடனை அடைக்க ஸ்டாலின் ஜெயக்குமாரிடம் 5 இலட்சம் உரூபாய் கடன் வாங்கினார் என்றால் எனக்குத் தெரியாது.

26.12.2016-ஆம் தேதியன்று காலை 09.45 மணிக்கு நான் என் மகன் வீடுள்ள பகுதியில் நடந்து சென்றேன் என்றும் என்னை ஸ்டாலின் ஜெயக்குமாரும் அவருடைய ஆட்களும் அடித்துவிட்டனர் என்றும் அதுச் சம்மந்தமாக நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது காவல் துறையினரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் என் மகன் கிரயம் கொடுத்த வீட்டை என் மகனுக்கே திருப்பிக் கொடுப்பதாக ஸ்டாலின் ஜெயக்குமார் சொன்னதால் அந்த வழக்கில் சமாதானமாக சென்று -விட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல.

மேற்சொன்ன சூழ்நிலையில்தான் 19.12.2017-ஆம் தேதியன்று ஸ்டாலின் ஜெயக்குமார் தூத்துக்குடியில் இருந்து கூலி படையை வரவழைத்து அமிர்தராஜை மேட்டூர் இந்துஸ்தான் தாபா உணவகத்தில் வைத்து வெட்டி கொலை செய்ததாக கேள்விப்பட்டதாக புலனாய்வு அதிகாரியிடம் சொன்னேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.